31st March 1964]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஒரு இடத்தில் உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்கவேண்டுமென்று சொன்னால் யார் உயர்நிலைப் பள்ளிவேண்டுமென்று கேட்கிறார்களோ அவர்களே நிலத்தை வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். வசதி இல்லாத இடங்களில் அதாவது, பஞ்சாயத்துக்களில் நிலம் வாங்குவது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே பள்ளிவேண்டுமென்கின்றவர் களே நிலத்தை வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று நிர்ப்பந்திக் காமல் இருப்பார்களா? அதற்குப் பதிலாக சர்க்காரே மேற்படி இடத்திற்கு வேண்டிய நிலத்தை வாங்கிக் கொடுக்க முன் வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உயர்நிலைப் பள்ளி அமைக்க வேண்டுமென்றால் அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்கிறது. ஆனால் 10,000 ரூபாய் டெபாசிட் கட்டவேண்டும். முதல் ஆண்டு 5,000 இரண்டாவது ஆண்டு 3,000 மூன்றாவது ஆண்டு 2,000 என்று கட்டவேண்டும். பள்ளிக் கட்டிடம் கட்ட மக்கள் முன் வர வேண்டும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிய பஸ் மார்க்கங்கள்

* 489 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்ட அபிவிருத்தி மன்றம் 1962-63-ல் புதிய பஸ் ரூட்டுகளில் பஸ் விடும்படி தீர்மானம் செய்து சர்க்கா ருக்கு அனுப்பியுள்ளதா ?

(இ) அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) ஆம்.

(இ) சபையில் ஓர் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. முருகையன் : சபையின் முன் வைக்கப்பட்ட அறிக்கை யில் நாகப்பட்டினம், புதுக்கோட்டை வழியாக இராமநாதபுரத் திற்கு ஒரு பஸ் விடப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த பஸ் எப்போது முதல் விடப்படும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

சின்னசாமியின் தற்கொலை

* 490 **கேள்வி—திரு. வி. எஸ். எஸ். மணி :**
திரு. எஸ். ஆறுமுகம் :
திரு. செ. மாதவன் :
திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி : } கனம் முதல்

---

[a] 860–863-ம் பக்கங்களில் ஐந்தாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[31st March 1964

அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 25—1—1964-ல் திருச்சியில் ரெயில் நிலையத்திற்கு எதிரே உள்ள ரோட்டில் சின்னச்சாமி என்ற வாலிபர் இந்தி திணிப்பைக் கண்டித்து தன் உடலில் பெட்ரோலை ஊற்றி தீ வைத்து "இந்தி ஒழிக" என்று கோஷமிட்டு உயிர்த்தியாகம் செய்தது உண்மையா ?

(இ) அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) It is a fact that he committed suicide by pouring petrol on his body and setting it on fire. It is not known whether he shouted any anti-Hindi slogan at that time.

(*b*) Attempts were made to provide medical assistance by rushing him to the hospital. But they were of no avail. The body was handed over to the relatives for cremation after the post-mortem examination.

திரு. வி. எஸ். எஸ். மணி : இந்த அரசாங்கம் தாய் மொழியைக் காக்கத் தவறிய காரணத்தால் மாபெரும் தியாகி சின்னசாமி வரலாற்றின் வீரச் செயலாக உயிர்த் தியாகம் செய்யும்படியாகத் தூண்டிவிட்ட குற்றம் அரசாங்கத்துடையது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

MR. SPEAKER : The question itself is insinuating.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கக் கொள்கைக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. தி.மு.க. தொண்டர்களுடைய பேச்சால் தான் இந்தச் சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. இந்தக் கன வானைப் பொறுத்தமட்டில் பற்றி எரிந்து கொண்டிருந்தபோது சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர் பார்த்துக்கொண்டு போயிருக் கிறார். இதை அரசாங்கம் தூண்டி விட்டது என்று சொல்வதில் பொருள் இல்லை.

திரு. மு. கருணாநிதி : சின்னசாமி பற்றி எரிந்து கொண்டிருக் கும்போது தி.மு.க. சட்ட மன்ற உறுப்பினர் பேசாமல் போய்க் கொண்டிருந்தார் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, தி.மு.க. இந்தச் செயலைத் தூண்டிவிட்டது என்று முதலமைச்சர் அவர்கள் சொன்ன வாதம் பொருந்தாது அல்லவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தி.மு.க. பேச்சால் தூண்டப் பட்டார் என்று சொன்னேன். தி.மு.க. சட்ட மன்ற உறுப்பினர் அப்போது அந்த வழியாகப் போகும்போது யார் பற்றி எரிகிறார் கள் என்று தெரிந்துகொள்ளவேண்டும் என்றுகூட இல்லாமல் போயிருக்கிறார்.

திரு. மு. கருணாநிதி : சின்னசாமியைப்பற்றிய இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இந்தச் செயலைத் தி.மு.க. ஆதரிக்கவில்லை என்று அறிக்கை விட்டதையும், கூட்டங்களில் எடுத்துப் பேசியதையும், இந்தச் செயலை ஆதரிக்கவில்லையாயினும் தியாகத்தைப்பற்றி எடுத்துக் கூறியிருப்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைக் கனம் எதிர்கட்சி துணைத் தலைவர் அவர்கள் சொல்ல வேண்டியதில்லை. அதை அவர்கள் ஆதரிப்பதாக இருந்தால் இன்னும் பலபேர் தங்களை எரித்துக்கொள்வதற்கு முன்வந்திருக்கவேண்டும். யாரும் வராததிலிருந்தே இது தெரிகிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி : சின்னசாமி அவர்கள் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்தபோது ஒரு ஆறுதல் சொல்லியிருந்தால்கூட இந்த நிகழ்ச்சியைத் தவிர்த்திருக்கலாமல்லவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : யார் சின்னசாமி என்பது எனக்குத் தெரியாது. ரயில்வே ஸ்டேஷனில் ஒருவர் 'தமிழைக் காப்பாற்றுங்கள்' என்று என்னிடம் சொன்னார். 'சரி' என்று சொன்னேன் ; 'மாட்டேன்' என்று சொல்லவில்லை.

UNSTARRED QUESTIONS.

Tuticorin Harbour Project

126 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தி வேலைகளில் இது வரை நடந்துள்ள வேலைகளின் விவரமென்ன?

(இ) வேலைகள் திட்டமிட்டபடி நடந்து வருகின்றனவா?

(உ) பூர்த்தி அடைய எவ்வளவு காலமாகும்?

A.—The information available with the Government is as follows :—

(*a*) *Details of the works so far done in the context of the Tuticorin Harbour Project*—

(i) The construction work on the four lane express highway from mile 28/1 of the Tuticorin-Palayamkottai Road to Harbour point and the construction road from mile 4/6 of Tuticorin-Tiruchendur Road to Harbour point in two reaches is proceeding according to schedule.

(ii) One-third of the earthwork for the railway access to the Harbour point from Milavittan station has been completed. Out of the 32 bridges to be executed, seven have been completed. Work is also proceeding satisfactorily on the major bridge across the Karampallam tank surplus course.

(iii) Quarries in and around Thattapparai and Ambasamudram have been fixed. Tenders have been called. Approach roads to Quarry sites are also nearing completion.